தினமணி
எமது செய்தியாளர்களை தொடர்புகொள்ள

கோவை	94425 04156
மேட்டுப்பாளையம்	94878 42563
பெ.நா.பாளையம்	98425 63953
சூலூர்	98422 44599
அன்னூர்	91502 49095
பொள்ளாச்சி	89034 44119
மதுக்கரை	73735 45727
வால்பாறை	94863 24619

தினமணி
சந்தா குறித்த விவரம் மற்றும் புகார்களுக்கு...

கோயம்புத்தூர்	: 97902 12447
மேட்டுப்பாளையம் & அன்னூர்	: 77088 26235
சூலூர்	: 73730 55255
மதுக்கரை	: 88701 48269
பொள்ளாச்சி	: 90435 00177

உதவி மைய எண் : 88070 00216

இஸ்ரேல் – பாலஸ்தீன போரை நிறுத்தக் கோரி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் ஆர்ப்பாட்டம்

கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் முன் பி.ஆர்.நடராஜன் எம்.பி.தலைமையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர்.

கோவை, ஜூன் 2: இஸ்ரேல் – பாலஸ்தீன போரை நிறுத்தக் கோரி கோவையில் பி.ஆர்.நடராஜன் எம்.பி. தலைமையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாலஸ்தீன பகுதியான காஸாவில், இஸ்ரேல் ராணுவம் கடந்த ஆண்டு அக்டோபர் முதல் இனப்படுகொலை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இஸ்ரேல் ராணுவத்தின் இந்த நடவடிக்கையால் 36 ஆயிரத்துக்கும்மேலான பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ராஃபாவில் அகதிகள் முகாமின் மீது இஸ்ரேல் ராணுவம் கடந்த 26-ஆம் தேதி நடத்திய குண்டுவீச்சு தாக்குதலில் 45 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இஸ்ரேல் அரசைக் கண்டித்தும், போரை நிறுத்தக் கோரியும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தமிழகம் முழுவதும் ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அதன்படி, கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகம் முன் மக்களவை உறுப்பினர் பி.ஆர்.நடராஜன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில், பாலஸ்தீன பகுதிகளில் உடனடியாக போர் நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும். இஸ்ரேலுக்கு ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதை மத்திய அரசு நிறுத்த வேண்டும். சுதந்திரமான பாலஸ்தீன நாட்டை ஐநா சபை மூலம் உருவாக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன.

ஆர்ப்பாட்டத்தில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

'புதிய கட்டட வரைபட அனுமதி: மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு கட்டாயம்'

மழைநீர் சேகரிப்பு தொடர்பான கருத்தரங்கில் பேசுகிறார் மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி. உடன், மாநகராட்சி ஆணையர் மா.சிவகுரு பிரபாகரன் உள்ளிட்டோர்.

கோவை, ஜூன் 2: மாநகரில் புதிய கட்டட வரைபட அனுமதியின் போது, அனைத்து கட்டடங்களுக்கும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்று மாநகராட்சி ஆணையர் மா.சிவகுரு பிரபாகரன் தெரிவித்துள்ளார்.

கோவை ஆர்.எஸ்.புரத்தில் உள்ள மாநகராட்சி கலையரங்கில் மழைநீர் சேகரிப்பு தொடர்பான கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது. இதில், மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி தலைமை வகித்தார். மாநகராட்சி ஆணையர் மா.சிவகுரு பிரபாகரன் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் பேசுகையில், 'கோவை மாவட்டத்துக்கு முக்கிய நீராதாரமாக நொய்யல், சிறுவாணி ஆறுகள் விளங்குகின்றன. மாவட்டத்தின் மக்கள் தொகை பெருக்கத்துக்கு ஏற்றாற்போல, மழைநீரை முழுமையாக சேமிக்கின்ற வகையில் மக்கள் வீடுகள், வணிக வளாகங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் மழைநீரை சேமிக்க வேண்டும். மேலும், ஒவ்வொரு வீட்டிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை சீர்செய்து மழைநீரை முழுமையாக சேமிக்க வேண்டும் என்றார்.

மாநகராட்சி ஆணையர் மா.சிவகுரு பிரபாகரன் பேசுகையில், 'மாநகராட்சிப் பகுதிகளில் புதிய கட்டட வரைபட அனுமதியின் போது, அனைத்து கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

மேலும், மழைநீரை முழுமையாக சேகரிக்கும் வகையில் கோவை மாநகராட்சிப் பகுதியில் அமைந்துள்ள கிருஷ்ணாம்பதி குளம், செல்வம்பதி குளம், குமாரசாமி குளம், செல்வசிந்தாமணி குளம், பெரிய குளம், வாலாங்குளம் மற்றும் குறிச்சி குளம் ஆகிய 7 குளங்கள் புனரமைக்கப்பட்டு மழைநீர் சேகரிப்பு செய்யப்பட்டுள்ளது.

அதேபோல, நரசிம்மபதி, உருமாண்டம்பாளையம், சின்னவேடம்பட்டி குளங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன என்றார்.

முன்னதாக, மழைநீர் சேகரிப்பின் அவசியம் குறித்து அறிந்திடும் வகையில் அமைக்கப்பட்டிருந்த கருத்து காட்சியை மாவட்ட ஆட்சியர், மாநகராட்சி ஆணையர் ஆகியோர் பார்வையிட்டனர்.

இக்கூட்டத்தில், உதவி ஆட்சியர் (பயிற்சி) அங்கித்குமார் ஜெயின், மாநகர தலைமைப் பொறியாளர் அன்பழகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

காவல் நிலைய வளாகத்துக்குள் புகுந்த பாம்பு

அன்னூர் காவல் நிலைய வளாகத்துக்குள் புகுந்த பாம்பை பிடித்த பாம்புபிடி வீரர்.

அன்னூர், ஜூன் 2: அன்னூர் காவல் நிலைய வளாகத்துக்குள் புகுந்த சாரைப் பாம்பை பாம்புபிடி வீரர் ஞாயிற்றுக்கிழமை பிடித்தார்.

அன்னூர் காவல் நிலைய வளாகத்துக்குள் உள்ள பழைய கட்டடத்துக்குள் ஞாயிற்றுக்கிழமை காலை சாரைப்பாம்பு புகுந்தது.

இதனைப் பார்த்த போலீஸார், பாம்புபிடி வீரர்களுக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்துக்கு வந்த பாம்புபிடி வீரர், பழைய கட்டடத்துக்குள் பதுங்கி இருந்த சுமார் 6 அடி நீள சாரைப்பாம்பை ஒரு மணி நேரத்துக்கும் மேலாக போராடி மீட்டார். இதையடுத்து, அந்தப் பாம்பு அடர்ந்த வனப் பகுதியில் விடுவிக்கப்பட்டது.

போத்தனூர் வழித்தடத்தில் மங்களூரு – பாட்னா இடையே சிறப்பு ரயில்

கோவை, ஜூன் 2: கர்நாடக மாநிலம், மங்களூரு – பிகார் மாநிலம், பாட்னா இடையே போத்தனூர் வழித்தடத்தில் சிறப்பு ரயில் இயக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சேலம் ரயில்வே கோட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

மங்களூரில் இருந்து ஜூன் 4 –ஆம் தேதி இரவு 8 மணிக்குப் புறப்படும் மங்களூரு – பாட்னா சிறப்பு ரயில் (எண்: 03244) ஜூன் 7–ஆம் தேதி காலை 5.30 மணிக்கு பாட்னாவைச் சென்றடையும்.

இந்த ரயிலானது காசர்கோடு, பையனூர், கண்ணூர், தலச்சேரி, வடகரை, கோழிக்கோடு, திரூர், ஷொரணூர், பாலக்காடு, போத்தனூர், திருப்பூர், ஈரோடு, சேலம், ஜோலார்பேட்டை, காட்பாடி, பெரம்பூர், கூடூர், ஒங்கோல், விஜயவாடா, வரங்கல், நாக்பூர், ஜபல்பூர், தன்பூர் உள்ளிட்ட நிலையங்களில் நின்று செல்லும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

10, பிளஸ் 2 தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு பரிசு

10, பிளஸ் 2 பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு பரிசு வழங்கும் அருந்ததியர் சமூக பொது நல அறக்கட்டளையினர்.

கோவை, ஜூன் 2: அருந்ததியர் சமூக பொது நல அறக்கட்டளை சார்பில் 10, பிளஸ் 2 பொதுத்தேர்வுகளில் அதிக பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பேரூர் அருந்ததியர் சமூக மடத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் அறக்கட்டளை செயலாளர் செந்தில்குமார் வரவேற்றார். பேரூர் அருந்ததியர் சமூக பொது நல அறக்கட்டளைத் தலைவர் எஸ். செல்வகுமார் தலைமை வகித்தார். துணைச் செயலாளர் திருமலைசாமி, கௌரவ ஆலோசகர்கள் நடராஜன், மருதாசலம், உயர்நீதிமன்ற வழக்குரைஞர் சுமதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னாள் பொள்ளாச்சி மக்களவை உறுப்பினர் எம். தியாகராஜன் நிகழ்ச்சியைத் தொடங்கிவைத்தார்.

இதில் 10, பிளஸ் 2 பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு துணை மாநில வரி அதிகாரி ஆர்.கே. ஜெயஸ்ரீ, பாரதியார் பல்கலைக்கழக ஐ.நா. சிறப்பு பிரதிநிதி காந்தியவேந்தன், வேடப்பட்டி கிராம கல்வி பாதுகாவலர் திருமூர்த்தி ஆகியோர் பரிசுகளை வழங்கினர். கல்வியின் அவசியம் குறித்து பேச்சாளர் ஸ்ரீராம் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், அறக்கட்டளை நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

எலெக்ட்ரானிக்ஸ் கடையில் ரூ.24.81 லட்சம் கையாடல்

பெண் ஊழியர் கைது

கோவை, ஜூன் 2: கோவையில் எலெக்ட்ரானிக்ஸ் பொருள்கள் விற்பனை செய்யும் கடையில் ரூ.24.81 லட்சம் கையாடல் செய்த பெண் ஊழியரை போலீஸார் கைது செய்தனர்.

கோவை, ஆர்.எஸ்.புரம் வணிக வளாகத்தில் உள்ள எலெக்ட்ரானிக்ஸ் பொருள்கள் விற்பனை செய்யும் கடையில் பன்னிமடையைச் சேர்ந்த கமலி (32) என்பவர் பணியாற்றி வந்துள்ளார்.

இந்நிலையில், கடையின் உரிமையாளர் அண்மையில் கணக்கு தணிக்கை மேற்கொண்டுள்ளார். அப்போது, கடந்த 2023 செப்டம்பர் முதல் 2024 மே மாதம் வரை ரூ.24.81 லட்சம் கையாடல் செய்தது தெரியவந்தது. இது தொடர்பாக கடையின் உரிமையாளர் சார்பில் நடத்தப்பட்ட ரகசிய விசாரணையில் இந்த மோசடியில் கமலிக்குத் தொடர்பு இருப்பது தெரியவந்தது.

இதையடுத்து, ஆர்.எஸ்.புரம் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. இதன்பேரில், கமலி மீது வழக்குப் பதிவு செய்த போலீஸார், அவரைக் கைது செய்தனர்.

கொடிசியா சாலையில் எரியாத மின் விளக்குகள்

நடைப்பயிற்சி செல்வோர் அவதி

கோவை, ஜூன் 2: கோவை, கொடிசியா சாலையில் மின் விளக்குகள் எரியாததால் அப்பகுதியில் நடைப்பயிற்சி மேற்கொள்வோர் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

கோவை, கொடிசியா நடைப்பயிற்சிக் குழு மற்றும் மூத்த குடிமக்கள் சார்பில் மாவட்ட ஆட்சியர், மாநகராட்சி ஆணையர், முதல்வரின் தனிப் பிரிவுக்கு மனு அனுப்பப்பட்டது.

அதில் கூறியிருப்பதாவது: கோவையில் செம்மொழி மாநாடு நடைபெற்ற தருணத்தில் கொடிசியா அருகே தரமான சாலை அமைத்து, சீரான இடைவெளியில் மின் கம்பங்கள் அமைக்கப்பட்டன. தற்போது இந்த மின் விளக்குகள் எரிவதில்லை. இதனால், அதிகாலையில் நடைப்பயிற்சி மேற்கொள்ளும் முதியோர், பெண்கள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகின்றனர். இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள், மாநகராட்சி நிர்வாகத்திடம் பலமுறை புகார் தெரிவித்தும் குறைபாடுகள் சரிசெய்யப்படவில்லை.

எனவே, கொடிசியா பகுதியில் அச்சமின்றி நடைப்பயிற்சி மேற்கொள்ள எரியாத மின் விளக்குகளை சரிசெய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை வாக்கு எண்ணிக்கை

கோவை, பொள்ளாச்சிக்கு 4 மேற்பார்வையாளர்கள் நியமனம்

கோவை, ஜூன் 2: கோவை, பொள்ளாச்சி மக்களவைத் தொகுதிக்கு தேர்தல் ஆணையத்தால் 4 வாக்கு எண்ணிக்கை மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: கோவை மக்களவைத் தொகுதிக்கான வாக்கு எண்ணிக்கை கோவை, தடாகம் சாலையில் உள்ள அரசினர் தொழில்நுட்பக் கல்லூரியிலும், பொள்ளாச்சி மக்களவைத் தொகுதிக்கான வாக்கு எண்ணிக்கை பொள்ளாச்சி– உடுமலைப்பேட்டை சாலையில் உள்ள டாக்டர் மகாலிங்கம் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியிலும் செவ்வாய்க்கிழமை (ஜூன் 4) நடைபெற உள்ளது.

இப்பணிகளைக் கண்காணிக்கும் பொருட்டு கோவை, பொள்ளாச்சி மக்களவைத் தொகுதிக்கு தலா இருவர் வீதம் 4 வாக்கு எண்ணிக்கை மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி, கோவை மக்களவைத் தொகுதிக்குள்பட்ட கவுண்டம்பாளையம், கோவை வடக்கு, கோவை தெற்கு ஆகிய சட்டப் பேரவைத் தொகுதிகளின் வாக்கு எண்ணிக்கைப் பார்வையாளராக வினோத் ராவ் நியமிக்கப்பட்டுள்ளார். அவரை 94896–87740 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம்.

பல்லடம், சூலூர், சிங்காநல்லூர் ஆகிய சட்டப் பேரவைத் தொகுதிகளின் வாக்கு எண்ணிக்கை மேற்பார்வையாளராக கிருஷ்ண குணால் நியமிக்கப்பட்டுள்ளார். அவரை 94891–88330 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

பொள்ளாச்சி மக்களவைத்தொகுதிக்குள்பட்ட தொண்டாமுத்தூர், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி ஆகிய சட்டப் பேரவைத் தொகுதிகளின் வாக்கு எண்ணிக்கை மேற்பார்வையாளராக அனுராக் சௌத்ரி நியமிக்கப்பட்டுள்ளார். அவரை 94896–06740 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

வால்பாறை, உடுமலை, மடத்துக்குளம் ஆகிய சட்டப் பேரவைத் தொகுதிகளின் வாக்கு எண்ணிக்கை மேற்பார்வையாளராக நிதீஷ்குமார் தாஸ் நியமிக்கப்பட்டுள்ளார். அவரை 94893–22366 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

இந்திய தேர்தல் ஆணையத்தால் நியமனம் செய்யப்பட்டுள்ள மேற்குறிப்பிட்ட வாக்கு எண்ணிக்கை பார்வையாளர்கள் வாக்கு எண்ணிக்கை மையத்தில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள், வாக்கு எண்ணும் பணியாளர்கள் நியமனம் உள்ளிட்ட அனைத்துப் பணிகளையும் கண்காணிப்பர்.

மேலும், வாக்கு எண்ணும் பணி மற்றும் நடைமுறைகள் தொடர்பான கோரிக்கைகள் மற்றும் புகார்களை வேட்பாளர்கள், முதன்மை முகவர்கள் ஆகியோர் வாக்கு எண்ணிக்கை மேற்பார்வையாளர்களிடம் தெரிவிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

OMKARA ASSETS RECONSTRUCTION Pvt. Ltd.

ஓம்காரா அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிட்டெட்
CIN : U67100TZ2014PTC020363
பெருநிறுவன அலுவலகம் : கோஹினூர் ஸ்கொயர், 47 வது தளம், N.C. கெல்கர் மார்க், R.G. கட்காரி சௌக், தாதார் (மேற்கு), மும்பை - 400 028 அலைபேசி எண் : +91 7558392736

பிற்சேர்க்கை - IV-A (பார்க்க - விதி 8(6)க்கான விதி விலக்கு) அசையா சொத்து விற்பனை செய்யப்படுவதற்கான மின்னணு ஏல விற்பனை பொது அறிவிப்பு
பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002 (''சர்ஃபாசி சட்டம்'') மற்றும் பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) க்கான விதி விலக்கு - ன் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை பொது அறிவிப்பு

இதன் மூலம் பொது மக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், இதன் கீழ் விவரிக்கப்பட்ட ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் / கடன் பெறாப்பு ஏற்படுத்தப்பட்ட அசையா சொத்து, ஓம்காரா அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிட்டெட் - ன் அதிகாரப்பூர்வ அலுவலரால் 15.11.2019 அன்று அடையாள சுவாதீனம் எடுக்கப்பட்டுள்ளது. மேலும், OARPL ஆனது, 29.09.2016 தேதிய பணி ஒப்படைவு ஒப்பந்தத்தின் கீழ் சிட்டி யூனியன் வங்கி (பணி ஒப்படைப்பவர்) யிடமிருந்து இதன் கீழ்க்கண்ட ஜாமீன் சொத்துக்களுடன் சேர்த்து இதன் கீழ்க்கண்ட கணக்குகளில் உள்ள மொத்த நிலுவைத்தொகைகளையும் அடைந்துள்ளது. அதனால், OARPL ஆனது பணி ஒப்படைப்பவரின் நிலையினை பெற்று, நிலுவைத்தொகைகளை வசூலிக்கவும், பிணைக்காப்பு அமலாக்கம் செய்யவும் அதிகாரம் பெற்றுள்ளது. OARPL ன் அதிகாரப்பூர்வ அலுவலர் நிலுவைத்தொகைகளை வசூலிப்பதற்காக, இதன் கீழ்க்குறிப்பிட்ட ஜாமீன் சொத்துக்களை விற்பனை செய்ய இதன் மூலம் உத்தேசித்துள்ளார்., அதனால் ஜாமீன் சொத்துக்களை வாங்குவதற்கான விலைப்புள்ளிகள் / விலைகோரல்களை மூடி முத்திரையிட்ட உறையிலிட்டு வரவேற்கப்படுகின்றன. இதன் கீழ்க்கண்ட அந்தந்த களத்தில் காண்பிக்கப்பட்டுள்ள ஜாமீன் பெற்று கடனளித்த OARPL க்கு அந்தந்த கடன்தாரர் மற்றும் கூட்டு கடன்தாரர்(களிடமிருந்து) நிலுவையாக உள்ள தொகைகளை வசூலிப்பதற்காக, இதில் குறிப்பிடப்பட்டுள்ள அடையாள சுவாதீனத்திலுள்ள சொத்துக்கள் சர்ஃபாசி சட்டம் 13(2) மற்றும் (4) ன் கீழான ஏற்பாடுகளின் கீழான அதிகாரத்தையும், உரிமைகளையும் செயலுறுத்தி ''இருக்கின்ற இடத்தில்'' ''இருக்கின்ற நிலையில்'' மற்றும் ''இருக்கின்றவற்றுடன்'' மற்றும் ''திரும்ப பெறத்தகாதவாறு'' என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். **கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள், ஜாமீன் சொத்துக்கள், பிரிவு 13(2) ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு அனுப்பிய தேதி, அடிப்படை விலை, விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை, டேவணித்தொகை, ஆய்வு தேதி மற்றும் நேரம் ஆகியன இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.**

கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் பெயர்	ஜாமீன் சொத்து விபரங்களாவன	சொத்தின் உரிமையாளர்	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் கோரப்பட்ட தொகை	அடிப்படை விலை	விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை	டேவணித்தொகை / ஆய்வு தேதி மற்றும் நேரம்
1). திரு N. வெங்கடேஷ் பிரபு (கடன்தாரர்) 2). திருமதி R கலைசெல்வி (கடன்தாரர்)	கோயமுத்தூர் பதிவு மாவட்டம், இணை II சார்பதிவு மாவட்டம், முன்பு கோயமுத்தூர் தாலுக்கா, தற்போதைய பேரூர் தாலுக்கா, குனியமுத்தூர் கிராமம், சர்வே எண். 18/4 பகுதி., இதில் பின்வரும் எல்லைகளுக்கு மத்தியில் அதாவது தெற்கு - கிழமேல் சாலை, மேற்கு - தென்வடல் சாலை, வடக்கு - முருகனுக்கு சொந்தமான வீடு, கிழக்கு - தென்வடல் சாலை., இவைகளுக்கு மத்தியில் உள்ள அளவீடுகளாவன பின்வருமாறு - கிழமேல் வடக்கு புறம் - 50 அடி 3 இன்ச்., கிழமேல் தெற்கு புறம் - 51 அடி., தென்வடல் கிழக்கு புறம் - 42 அடி 6 இன்ச்., தென்வடல் மேற்கு புறம் - 40 அடி., என மொத்தம் 2088 சதுர அடி அல்லது 193.98 சதுர மீட்டர் அல்லது 4 சென்ட் 345-1/2 சதுர அடி பரப்பளவு கொண்ட இடம் மற்றும் அதில் உள்ள கட்டிடம் மற்றும் அனைத்து வழி வசதி உரிமைகள் மற்றும் வசதிகள் முழுவதும். இதன் கதவு எண். 7/61 & 61-1, சுகுணாபுரம் கிழக்கு, மின் இணைப்பு எண்கள். 03-269-002-517 & 03-269-002-1232, சொத்து வரி விதிப்பு எண்கள். 923634 & 9225100. இச்சொத்து கோயமுத்தூர் மாநகராட்சி எல்லைக்குள் (அடையாள சுவாதீனத்தில்) உள்ளது.	திரு N. வெங்கடேஷ் பிரபு & திருமதி R கலைசெல்வி	தேதி - 31.08.2019 தொகை - 31.07.2019 ம் தேதியின் படி, ரூ. 42,23,282.39/- (ரூபாய். நாற்பத்து இரண்டு இலட்சத்து இருபத்து மூன்றாயிரத்து இருநூற்று எண்பத்து இரண்டு மற்றும் பைசா முப்பத்து ஒன்பது மட்டும்) வட்டி மற்றும் வட்டி மற்றும் இதர கட்டணங்கள் உட்பட.	ரூ. 46,43,000/-	ரூ. 50,000/-	ரூ. 4,64,300/- அடையாள சுவதீனத்தில் உள்ளது.

கணக்கு எண் - 37644285876, பயனாளி பெயர் - Omkara Assets Reconstruction Pvt Ltd,வங்கி பெயர் - ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா, குர்லா மேற்கு, மும்பை - 400 070 IFSC Code : SBIN0001886
மின்னணு ஏல தேதி & நேரம் - 21 ஜூன் 2024 (வெள்ளிக்கிழமை) காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை
விலைப்புள்ளிகள், பங்கேற்பு கூடிதம் / KYC ஆவணங்கள் / டேவணித்தொகைக்கான சான்று ஆகியவற்றை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி மற்றும் நேரம் - 20 ஜூன் 2024 (வியாழக்கிழமை மாலை 06.00 மணி வரை.

ஏலத்துக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள் - விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு வலைதளம் http://omkaraarc.com/auction.php ல் கொடுக்கப்பட்டுள்ள தொடர்பை தயவு கூர்ந்து பார்வையிடும். ஏலமானது OARPL மூலம் ஆன்லைனில் நடத்தப்படும். DD / பே ஆர்டர் (அசல்) அல்லது NEFT/RTGS மூலம் செலுத்தப்பட்ட டேவணித்தொகையுடன் கூடிய விலைப்புள்ளிகளை (ஆன்லைன் மற்றும் காகித வடிவம்) சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி - 20.06.2024 மாலை 06.00 மணி.டேவணித்தொகை செலுத்திய விருப்பமுள்ள ஏலதாரர்கள் உள்நுழை அடையாளம் & கடவுச்சொல் ஆகியவற்றை உருவாக்குவதிலும், தரவுகளை பதிவேற்றம் செய்வதிலும், விலைப்புள்ளி சமர்ப்பித்தலிலும், மின்னணு ஏல விலைகோரல் முறைக்கான பயிற்சிக்கும் மின்னணு ஏல சேவைதாரர் **"M/s. C1 India Pvt. Ltd"** யை உதவிக்கான தொலைபேசி எண் : +91-7291981124/25/26, உதவிக்கான மின்னஞ்சல் முகவரி : **support@bankeauctions.com** மற்றும் சொத்து தொடர்பான விசாரணைகளுக்கு அதிகாரப்பூர்வ அலுவலர், திரு ஹரிஷ் கௌடா, அலைபேசி எண் : 95945 97555, மின்னஞ்சல் முகவரி : hareesh.gowda@c1india.com மற்றும் சொத்து தொடர்பான விசாரணைகளுக்கு அதிகாரப்பூர்வ அலுவலர் திரு ஷுபோதாப் பானர்ஜி, அலைபேசி எண் : +91 7558392736, மின்னஞ்சல் முகவரி : s.banerjee@omkaraarc.com ல் அனைத்து வேலை நாட்களிலும் வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும். விருப்பமுள்ள ஏலதாரர்கள் திவால் மற்றும் நொடிப்புநிலை சட்டம் 2016 ன் பிரிவு 29A க்கு கட்டுப்பட்டு அறிவிக்க சமர்ப்பிக்க வேண்டும்., மேலும் விரிவான விபரங்களுக்கு விதிகள் மற்றும் நிபந்தனைகளை தயவு கூர்ந்து பார்வையிடவும்.

பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) ன் கீழ் விற்பனைக்கான சட்டபூர்வ அறிவிப்பு

இவ்வறிவிப்பானது, மேற்சொன்ன கடன் கணக்குக்கான கடன்தாரர்(களுக்கு) பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு, பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) சட்டம் 2002 ன் கீழான ஏற்பாடுகள் மற்றும் பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) ன் கீழ், மின்னணு ஏலம் மூலம் மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்குள் அவரவர்களால் விருப்பப்படும் பட்சத்தில், இதன் மேற்குறிப்பிட்ட நிலுவைத்தொகையை செலவுகள் மற்றும் கட்டணங்களுடன் திருப்பி செலுத்தி, சொத்துக்களை மீட்டுக்கொள்ளும் அறிவுறுத்தலுடன் (அவ்வாறு திருப்பி செலுத்த தவறும் பட்சத்தில்) நடத்தப்படும் ஏலம் / விற்பனை மூலம், அதிகாரப்பூர்வ அலுவலர் / ஜாமீன் பெற்று கடனளித்தவரின் அதிகார வரம்பில் பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(5) ல் பரிந்துரைக்கப்பட்ட ஏதேனும் முறையில் சொத்து விற்பனை செய்யப்படும் என்பதை தெரிவித்து வழங்கப்படும் (30) முப்பது நாட்களுக்கு குறைவிலாது வழங்கப்பட வேண்டிய கட்டாய அறிவிப்பாகும்.

தேதி : 03.06.2024
இடம் : மும்பை

ஒப்பம்/-
அதிகாரப்பூர்வ அலுவலர், ஓம்காரா அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிட்டெட்